# “வாதங்கள்: கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டில் ஏன் பால்நிலை முதன்மைப் -படுத்தப்படுகின்றது”

## ► பொதுவான வாதங்கள்

- ✓ வேறுபட்ட விளைவுகளும் வேறுபட்ட தேவைகளும்: பெண்கள், யுவதிகள், ஆண்கள், இளைஞர்கள் ஆகியோர் நிலக்கண்ணிவெடிகளால் பாதிக்கப்படுகின்றனர். அதனால் அவர்களுக்கான தேவைகளும் வேறுபட்ட வகைகளில் வழங்கப்பட வேண்டும். நிலக்கண்ணிவெடியினால் பாதிப்பிற்குள்ளான ஒருவர் வைத்திய சேவையை, நீண்டகால மீள்ஒருங்கிணைப்பு, கண்ணிவெடி அபாயக்கல்வி மற்றும் விழிப்புணர்வு போன்றவற்றை பெறுவதில் பால்நிலையானது செல்வாக்குச் செலுத்தி வருகின்றது.

## ► சர்வதேச நியமங்கள்

நிலக்கண்ணிவெடியகற்றும் திட்டங்களில் பால்நிலை புலப்பதிவுகள் நடைமுறைப்படுத்த வேண்டிய பிரத்தியேக தேவையை சில சர்வதேச நியமங்களும் வழிகாட்டிகளும் முக்கியத்துவப்படுத்துகின்றன.

- ✓ பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஐ.நா பாதுகாப்பு சபையின் பிரகடனம் 1325 (2000) பிரத்தியேகமாக வலியுறுத்துவது என்னவெனில், “பெண்கள் மற்றும் யுவதிகளின் பிரத்தியேக தேவைகளை, அனைத்துப் பங்காளர்களும் கண்ணிவெடியகற்றல் மற்றும் கண்ணிவெடி விழிப்புணர்வு திட்டங்களில் கருத்தில் கொள்ள வேண்டும்.”
- ✓ ஐக்கிய நாடுகள் சபையின் கண்ணிவெடி செயற்பாட்டு சேவைப்பிரிவானது (UNMAS) 2005ம் ஆண்டில் கண்ணிவெடி செயற்பாட்டு திட்டங்களுக்கான பால்நிலை வழிகாட்டி ஒன்றை வெளியிட்டுள்ளது.
- ✓ நிலக்கண்ணிவெடித் திட்டங்களில் பால்நிலை புலப்பதிவுகளின் தேவை கருத்தில் கொள்ளப்பட வேண்டிய அவசியத்தினை, ஐநாவின் ஆயுதகளைவு விவகாரங்களுக்கான திணைக்களம் (DDA) வலியுறுத்தியுள்ளது.
- ✓ 1995ல் பீஜிங் நடைமுறைக்கான செயற்திட்டம், மற்றும் 1998ல் பெண்களின் அந்தஸ்திற்கான ஆணைக்குழு என்பன, கண்ணிவெடியினால் பாதிப்பிற்குள்ளான பிரதேசங்களில் உள்ள பெண்களின் பிரத்தியேக விவகாரங்களை முன்னிலைப்படுத்தி காட்டியுள்ளன.

## ► சமத்துவமும் செயலாற்றல் மிக்க விவாதங்களும்

- ✓ **பாரபட்சமற்ற கண்ணிவெடி செயற்பாட்டிற்கான தேவை**

  கண்ணிவெடியகற்றும் செயற்பாடானது ஒரு வெற்றிடத்தில் இடம்பெறுவதில்லை. இவை பெண்கள் மற்றும் ஆண்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்கள் செயற்படுத்தப்பட்ட நடவடிக்கைகள், வளங்கள் மீதான கட்டுப்பாடுகள், அதனை அடையும் வாய்ப்புக்கள் அத்துடன் தீர்மானம் எடுக்கும் சந்தர்ப்பங்கள் ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாடுகளும், சமத்துவமின்மையும் காணப்படுகின்ற சூழ்நிலையிலே இடம்பெறுகின்றன. அதன் விளைவாக கண்ணிவெடிகற்றும் செயற்திட்டங்கள், பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமமான பயனை வழங்குவதில்லை. கண்ணிவெடியகற்றும் செயற்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையே நியாயனதாகவும், நிலவுகின்ற சமத்துவமின்மையை உணர்த்துபவையாகவும் அமைய வேண்டும்.

Campagne suisse contre les mines antipersonnel
3bis, chemin des Pontets, CH-1212 Grand-Lancy, Geneva, Switzerland.
Tel. +41 22 879 10 52 - Fax. +41 22 879 10 51
info@scbl-gender.ch www.scbl-gender.ch www.stopmines.ch

- ✓ **சமத்துவம் செயற்திறனுக்கான வழிகாட்டி**

  செயற்திறன் மிக்க மற்றும் நிலையான கண்ணிவெடியகற்றும் செயற்திட்டங்கள் பாரபட்சமற்ற நடைமுறைச் செயற்பாடுகளில் தங்கியுள்ளது. கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டு கொள்கைகள், நடவடிக்கைகள், மற்றும் திட்டங்கள் ஒவ்வொருவருக்கும் பயன் அளிப்பதை உறுதிப்படுத்தும் முகமாக, பால்நிலை புலப்பதிவானது திட்டமிடலின் தொடக்க நிலையிலிருந்தே ஒருங்கிணைக்கப்படல் வேண்டும். இது பெரும்பாலும் கண்ணிவெடியகற்றும் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் போன்றவற்றிற்கு பயனாளிகள் மற்றும் சேவைகளை வழங்குவதிலிருந்து, பெண்களினதும் ஆண்களினதும் சமமான பங்களிப்பு மற்றும் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். அத்துடன் பால் மற்றும் வயது சம்மந்தமான வேறுபட்ட தரவுகள் எல்லா நிலைகளிலும் பெறப்பட வேண்டும்.

- ✓ **பெறுபேறுகளை முன்னேற்றுவதில் கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டின் பன்மைத்துவம் முக்கியமானது.**

  கலப்புக் குழுக்களானது கண்ணிவெடியகற்றல் அல்லது அளவீடு செய்யும் குழுக்களாக அமையலாம். எடுத்துக்காட்டாக குறிக்கப்பட்ட குழுக்களின் தேவைகளை முக்கியப்படுத்துவதற்கு சாதகமாக இருக்கும். வேறுபட்ட நோக்குகள், சிந்தனைகள், ஆற்றல்கள் உடைய மக்களின் ஒத்துழைப்பினூடாக, பன்மைத்துவமானது கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை முன்னேற்றமடயச் செய்யும்.

## ► பண்புசார் வாதம்

- ✓ பெண்களைவிட ஆண்களே நிலக்கண்ணிவெடி விபத்துக்களில் அதிகமாக அகப்பட்டுக்கொள்ளும் சாத்தியம் காணப்படுகின்றது. நிலக்கண்ணிவெடிகளினால் பாதிப்பிற்குள்ளானவர்களுக்கான (85% - 90% ஆண்களும், இளைஞுகளும் ஆவார்கள்) உதவிகளின் சமனற்ற தன்மை காரணமாக, பெண்களின் இறப்புவீதமானது (43%) ஆண்களைவிட (25%) அதிகமாகக் காணப்பட்ட போதிலும், குறைவான புனர்வாழ்வு வசதிகளையே பெண்கள் பெறுகின்றனர். இதன் காரணமாக, அவர்கள் வேறுவகையான பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர்.

## ► அபிவிருத்தி தொடர்பான வாதங்கள்

- ✓ பால்நிலை சமத்துவம் என்பது அபிவிருத்திக்கான ஓர் முன்நிபந்தனையாகும். அக்சன் எய்ட் (Action Aid's) நிறுவனத்தின் வாசகத்திலிருந்து "பெண்களின், உரிமைகள், மற்றும் தெரிவுகள் செவிமடுக்கப்பட்டு, ஊக்குவிக்கப்பட்டு அத்துடன் பாதுகாக்கப்படாவிடத்து, வறுமைக்கு எதிரான எந்தவொரு பிரச்சாரமும் நம்பிக்கையை தருவதாக அமையாது." [1]
- ✓ கண்ணிவெடி செயற்பாடு என்பது நிலத்திலிருந்து கண்ணிவெடிகளை அகற்றுவதில் மட்டும் இலக்காக கொண்ட தனித்துவமான தொழில்நுட்ப பகுதியல்ல. இது பாதிப்பிற்குள்ளான தனிநபர்கள், பெண்கள், யுவதிகள், ஆண்கள், இளைஞர்கள் ஆகியோரை ஒருங்கிணைக்கும் அபிவிருத்தியின் ஒருபகுதியாக தங்கியுள்ளது.
- ✓ கண்ணிவெடியகற்றும் செயற்பாடானது, கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட சதுரமீற்றர் நிலப்பரப்பு பகுதிகளில் பெண்கள், யுவதிகள், ஆண்கள், இளைஞர்கள் அவ் நிலப்பரப்பை எப்படி, மற்றும் எவ்வாறு பயன்படுத்துகின்றார்கள் என்பதனை பகுப்பாய்விற்கு உட்படுத்திய நிலையிலிருந்து முன்னேற்றமடைவதாகும். இச் செயற்பாட்டில் பால்நிலை உகந்ததாக கருத்தில்கொள்ளப்படுவதுடன், பால்நிலையை முதன்மைப்படுத்தும் முயற்சிகள் ஒரு இயற்கையான நிலையை கொண்டுள்ளன.

---

[1] அக்சன் ஏய்ட் (Action Aid's) "பெண்கள் உரிமைக்கான தகவல் தளம்"
http://www.actionaid.org/assets/pdf/womensrightsfactsheet_a_w.pdf

**பல்வேறுபட்ட பகுதிகளைக் கொண்ட கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டில் ஏன் பால்நிலை விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.**

### ► அளவீடு செய்தல்

- ✓ பால்நிலையைக் கருத்தில் கொண்டு நடவடிக்கையை அமுல்படுத்தல், மாசுபடுத்தல் பற்றி ஒரு தெளிவான விளக்கத்தை பெறுவதற்கும், கண்ணிவெடி அகற்றும் முன்னுரிமைக்காகவும் முழுமையான தரவுகளை சேகரிப்பது மிக முக்கியமானதாகும். பெண்களும் ஆண்களும் அவர்கள் கொண்டுள்ள பால்நிலையை சார்ந்த பங்களிப்பு காரணமாக, கண்ணிவெடியினால் பாதிப்பிற்குள்ளான பிரதேசங்கள் பற்றிய வேறுபட்ட தகவல்களை கொண்டுள்ளனர். சரியான முழுமையான தகவல்களை மாத்திரம் பெறவேண்டும் ஆயின், பால்நிலை சமத்துவ ஆய்வுக் குழுக்களில் பெண்களினதும் ஆண்களினதும் ஆலோசனைகள் பெறப்பட வேண்டும். இவ்வாறாக இருபாலாரையும் உள்ளடக்கிய அனுகுமுறையானது ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து, இதன் மூலம் மிகவும் சரியான பெறுபேறுகள் கிடைப்பதுடன் ஓர் ஒழுங்குமுறையில் கண்ணிவெடி அகற்றலை மேற்கொள்ளமுடியும்.

### ► கண்ணிவெடி அகற்றல்

- ✓ கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கையானது பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஒரு வாழ்வாதார வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய வேலைவாய்ப்பினை அளிப்பதன் மூலமாக அவர்களின் குடும்பத்திற்கான நிதி பாதுகாப்பினை வழங்குகின்றது. கண்ணிவெடி அகற்றல் வேலைவாய்ப்பை பெண்கள் பெற்றுக்கொள்வதை தடுத்தலானது, அவர்களின் குடும்பத்தை மாத்திரமன்றி சமூகத்தின் நலனையும் பாதிக்கின்றது.
- ✓ கண்ணிவெடியகற்றும் பெண்கள் அவர்களின் அன்றாட சமூக நடவடிக்கையில் பங்கெடுத்து அச்சமூகத்தை முன்னேற்றுவதுடன், கண்ணிவெடியினால் பாதிப்பிற்குள்ளான அச்சமூகத்திலுள்ள ஏனைய பெண்களை உள்ளுர் அரசியல், சமூகசேவைகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும், அதன் மூலம் சமூகத்தில் ஒரு பதவியை வகிப்பதற்கும் அவர்களை தூண்டுவதுடன் அவர்களுக்கான முன்மாதிரிகளாகவும் திகழ்கின்றனர்.

### ► நிலத்தினை முன்னுரிமைப்படுத்தல்

- ✓ நிலக்கண்ணி வெடிகளை நிலத்திலிருந்து அகற்றும் செயற்பாட்டில் ஆண்களிடம் ஆலோசனை பெறப்படும்போது, பெண்கள் பிரத்தியேகமாக பயன்படுத்தும் நிலங்கள் குறிப்பாக தண்ணீர் மற்றும் விறகுசேகரிப்பதற்கு செல்லும் ஆபத்தான பாதைகள் நடைமுறையில் முன்னுரிமைப்படுத்தப்படாமலுள்ளது.

### ► நிலத்தினை கையளித்தல்

- ✓ நிலத்திற்கான உரிமையை பெறுவதில் பெண்கள் பாரபட்சங்களை எதிர்நோக்குகின்றார்கள், பால்நிலை உணர்வற்ற நிலையானது யாருக்கு கண்ணிவெடி அகற்றப்பட்ட நிலத்தினை அடைவதில் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பதை கருத்தில் கொள்ளாது இருப்பதனால் சிலவேளைகளில் அவ் நிலத்தினை உபயோகிக்கும் உரிமையை இழக்கும் அபாய நிலைக்கு பெண்கள் தள்ளப்படுகின்றார்கள்.

### ► கண்ணிவெடி அபாய கல்விக்கான (MRE) வாய்ப்பு

- ✓ பெண்கள் அவர்களது கல்வியறிவுக் குறைபாடு, தொலைக்காட்சி/வானொலி உபயோகமின்மை, அவர்களுக்குரிய உரிமைகள் பற்றிய தெளிவின்மை, நடமாடும் மட்டுப்பாடுகள், பால் வேறுபாடு தொடர்பான கூட்டங்களில் கலந்து கொள்ளாமை, பிள்ளைகளை பராமரித்தல் மற்றும் வீட்டு கடமைகள் போன்ற காரணங்களினால் கண்ணி வெடி அபாயக் கல்வியினை பெறும் வாய்ப்பினை இழப்பதோடு அதனை பற்றிய போதிய விளக்கமின்மையையும் கொண்டுள்ளார்கள்.

## ▶ கண்ணிவெடி அபாயக்கல்வி (MRE) தொடர்பான கற்கைநெறியின் உள்ளடக்கம்.

- ✓ நிலக்கண்ணி வெடிகளின் அபாயம் சம்மந்தமாக பெண்களும் ஆண்களும் வேறுபாடன நடத்தைகளையும் வெளிப்பாடுகளையும் கொண்டுள்ளார்கள். இதன் காரணமாக கண்ணி வெடி அபாயக்கல்விக்கான விடயங்கள் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு ஏற்றவகையில் மாற்றியமைக்கப்படும். இது பெண்களும், ஆண்களும் நிலக் கண்ணி வெடி தொடர்பாக கொண்டுள்ள அனுபவங்களை ஒரு ஒழுங்குமுறையில் பால்நிலை பகுப்பாய்விற்கு உட்படுத்துவதற்கு ஏதுவாக அமையும்.

## ▶ நிலக்கண்ணி வெடியினால் பாதிப்பிற்குள்ளானோரும் பாதிப்பிலிருந்து தப்பியோரும்.

- ✓ கண்ணி வெடியினால் பெரும்பான்மையாக 85%-90% பாதிப்பிற்குள்ளாகுபவர்கள் (காயப்படுதல் அல்லது இறத்தல்) ஆண்களாவர். இதில் முக்கியமாக கருதப்பட வேண்டியது என்னவெனில் பெரும்பான்மையாக பாதிப்பிற்குள்ளான ஆண்கள் வாழ்வது அல்லது சேர்ந்து இருப்பது பெண்களுடனேயே. (மனைவி, சகோதரி, மகள், தாய், வேறு குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் அல்லது அயலவர்கள்), இவர்களே நேரடியாக பாதிப்பிற்குள்ளானவர்களை பராமரிக்கின்றார்கள். இந்த நிலையினால் பெண்கள் பாரிய பொறுப்புகளை சுமக்கிறார்கள். இது அவர்களை ஒரு மோசமான நிலைக்கு தள்ளியுள்ளது.[2]
- ✓ நிலக்கண்ணி வெடியினால் “பாதிப்பிற்குள்ளானோர்” என்னும் வரைவிலக்கணமானது குறிப்பாக பெண்களை அதாவது சேர்ந்து வாழ்வோர், தங்கியுள்ளவர்கள் மற்றும் பாதிப்புள்ளானோரை (முக்கியமாக ஆண்கள்) பராமரிப்போரை உள்ளடக்கியது.

## ▶ பாதிப்பிற்குள்ளானவர்களுக்கு உதவுதல், அவர்களை மீள் ஒருங்கிணைத்தல்

- ✓ ஆண்களால் வளங்கள் குறைந்தளவிலும் கட்டுப்பாட்டிலும் வைக்கப்பட்டுள்ள சமூகங்களிலுள்ள பெண்கள் குறைவான மருத்துவ வசதிகளையும் உறுப்புக்கள் பொருத்துவதில் சிரமங்களையும் எதிர்நோக்குகின்றார்கள். பெண்கள் மற்றும் யுவதிகளுக்கான விரிவாக்கப்பட்ட புனர்வாழ்வு திட்டங்களுக்கு நேரமும் பணமும் முதலீடு செய்யும் போது அவை எதிர்பார்த்த பயன்களை அதிகரிப்பவையாக அமையலாம். [3]
- ✓ சில கலாச்சார சூழ்நிலைகளில் பெண்கள் போதியளவு சுகாதார சேவையையும் புனர்வாழ்வையும் பெறுவதில் பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றார்கள். ஆனால் மரபுரீதியாகவும் மற்றும் புலப்பதிவு ரீதியாகவும் அதே பாலினைச் சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர்களினால் வைத்திய சேவை வழங்கப்படும் போது இப் பிரச்சினை காணப்படுவதில்லை. சில பெண்வைத்தியர்களை கொண்டுள்ள அல்லது பெண்வைத்தியர் இல்லாத பிரதேசங்களில் பெண்கள் தங்களுக்கு வேண்டிய வைத்திய உதவிகளை பெறுவதில்லை.
- ✓ பெண்களும் ஆண்களும் புனர்வாழ்விற்காக வேறுபட்டு செயற்படுகின்றனர். எனவே மருத்துவ உதவிகளும் அதற்கு ஏற்றாற் போன்றே மாற்றியமைக்கப்படப் வேண்டும். உதாரணமாக பாதிப்பிற்குள்ளாகியதன் பின்னர், ஆண்களுக்கு புனர்வாழ்விற்கு நீண்ட காலம் எடுப்பதாக சில ஆய்வுகள் காட்டுகின்றன. இதன் காரணமாக ஊனங்களுடன் வாழும் ஆண்கள் தங்களை மாற்றியமைப்பதில் பெண்களை விட சில பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர்.

---

[2] உதாரணமாக பெண்களும் யுவதிகளும் குடும்பத்தில் பாதிப்பிற்குள்ளான அங்கத்தவர்களை பாரமரிப்பதில் ஈடுபட்டுள்ளதால் அவர்கள் கல்வி மற்றும் ஊதியம் தரும் தொழில் வாய்ப்பினை பெறுவதிலிருந்து தவிர்க்கப்படலாம். வம்சத் தலைவர்களை (ஆண்கள்) கொண்ட சமூகங்கள் மாறுபட்ட பங்கினை காட்டும் போது அவை பெண்களுக்கு களங்கமுண்டாக்குதல், தனிமைப்படுத்துதல், ஆதரவற்ற நிலையை ஏற்படுத்துகின்றன. மனைவியினை தங்கி வாழும் ஆண்கள் சில வேளைகளில் அவர்களின் மனத்தாங்கல் சோர்வு நிலையிலிருந்து விரக்தி நிலைக்கு மாறும் போது அவை பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறைகளுக்கு வழிவகுக்கின்றன. கணவனின் வருமானம் இழக்கப்படும் நிலையினைக் கொண்ட சமூகத்தில் உள்ள பெண்கள் எதிர் நோக்கும் வேலைப் பிரச்சனையானது அவர்களை மோசமான வறுமை நிலைக்கோ அல்லது விபச்சாரத்திற்கோ இட்டுச்செல்கின்றது..

[3] ICRC (சர்வதேச செஞ்சிலுவை சங்கம்), போரில் நிலக்கண்ணி வெடிகளும் வெடிப் பொருட்களும், போரில் பெண்கள், மாசி 2008, பக்கம் 16

- ✓ சமூக ரீதியில் பார்க்கும் போது பாதிப்பிற்குள்ளானதற்கு பின்னர் பெண்களும் ஆண்களும் வேறு வகையாகவே பராமரிக்கப்படுகின்றனர். காயமடைந்த ஆண்கள் பொதுவாக அவர்களின் குடும்பத்தினரால் (பெண்கள் உட்பட) ஆதரவளிக்கப்படுகின்றனர். ஆனால் பெண்களில், விவாகமான பெண்கள் விவாகரத்தையும் விவாகமாகாத பெண்கள் திருமணம் செய்ய முடியாத அபாய நிலையினையும் அடைகின்றனர். கைவிடப்பட்ட நிலை, களங்கப்படுத்திய நிலை, தனிமையான நிலை, பொருளாதார பாதிப்பிற்குள்ளான நிலை காரணமாக பெண்கள் மேலும் ஒரு மோசமான வறுமை நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.[4]
- ✓ வாழ்வதார வருமான நடவடிக்கைகளிலிருந்து பெண்கள் பாரபட்சப்படுத்தப்படுகின்றனர். ஏனெனில், அவர்கள் வழமையாக ஒரு குடும்பத்தில் வருமானம் ஈட்டுபவர்களாக கருதப்படாமையே. இருப்பினும், பாதிப்பிற்குள்ளான நாடுகளிலுள்ள ஆண் உறவினர்களையோ அல்லது கணவனையோ இழந்த பெண்கள் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர் நொக்குகின்றனர். ஒரு பெண் சமூகத்தில் சில அல்லது சகல விதமான தொழில் வாய்ப்புக்களும் மறுக்கப்பட்ட நிலையிலுள்ளனர். அத்துடன் அவர்களுக்கு பாதுகாப்பானதாகவோ அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஊதியத்தையோ பெறக்கூடிய தொழில்களை அடையக்கூடிய வாய்ப்பினை பெறமுடியாத நிலையில், தன் குடும்பத்தின் முழு பொறுப்பையும் சடுதியாக தாங்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். ஆகவே, பெண்களுக்கு மீள்ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளில் முக்கியத்துவம் கொடுப்பதன் மூலமாக, அவர்களின் குடும்ப பொருளாதாரத்துக்கு ஈடுகொடுக்க கூடியவர்களாக மாற்றி அமைக்கலாம்.

---

4 வளர்ந்து வரும் நாடுகளில் ஊனமுற்ற பெண்களின் தொழில் இன்மை விகிதம் 100% (WILPF, பெண்களும் படைக்கலத் தொகுதிகளும்)